## ரணவிரு சேவா அதிகாரசபை – 2015

ரணவிரு சேவா அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 54 ஆம் இலக்க ரணவிரு சேவா அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 9(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, ரணவிரு சேவா அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 3,322,994 இற்கு கொள்வனவு செய்திருந்த வீட்டுத் தளபாடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக ரூபா 23,295 கூடுதலாக பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 90,000 ஆன சட்டக் கட்டணங்கள் மற்றும் அறவிடப்பட வேண்டியதாகவுள்ள ரூபா 71,000 ஆன வெசாக் அட்டைகள் விற்பனை வருமானம் என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 15,550 ஆன காப்புறுதி இழப்பீட்டுப் பெறுவனவு வாகன திருத்தம் மற்றும் பராமரிப்பு செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2015 ஆம் ஆண்டின் ரணவிரு தின ஞாபகார்த்த விழாக் கொண்டாட்டத்திற்கு அதிகாரசபையின் மகளிர் பதவியணியினருக்காக ரூபா 281,800 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 38 சீருடைத் தொகுதிகளில் ரூபா 44,595 பெறுமதியான 4 தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகளுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் 8(1) ஆம் பிரிவு | |
| (i) 108 (3)(2) ஆம் பிரிவு | அரசின் ஒவ்வொரு சட்டரீதியான கூட்டுத்தாபமொன்றினாலும் நிதியாண்டு தொடர்பாக பாதிடொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் அது உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் 2015 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2015 ஏப்ரல் 09 ஆந் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவு | ரூபா 500,000 ஐ விஞ்சும் பொருட்கள், சேவைகள் ஒப்பந்தங்களுக்காக அதிகாரசபை முறையான உடன்படிக்கையொன்றை மேற்கொள்ள வேண்டிய போதிலும், ரணவிரு தினத்தை கொண்டாடுவதற்காக ரூபா 1,949,589 தொகையான ஒலிபெருக்கிகள், நாற்காலிகள் மற்றும் பொதுமக்கள் மேவுகை என்பவற்றைக் கொள்வனவு செய்யும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 44,621,195 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,853,444 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 31,767,751 தொகையான நலிவு அவதானிக்கப்பட்டது. அரசின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 10,536,581 இனால் அதிகரித்தமைக்கு ஒப்பாக ஆளுக்குரிய வேதனம் ரூபா 6,832,819 ஆலும் செயற்திட்ட செயற்பாட்டுச் செலவினம் ரூபா 28,335,737 ஆலும் அதிகரித்தமை இந்நலிவுக்குப் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 11,402,524 தொகையாக காணப்பட்ட அதிகாரசபையின் மிகை 2012 ஆம் ஆண்டளவில் ரூபா 2,294,684 வரை குறைவடைந்திருந்தது. 2013 ஆம் ஆண்டளவில் நிதி விளைவுகள் ரூபா 12,301,555 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன், அப்பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 44,621,195 வரை அதிகரித்திருந்தது.

ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 35,677,966 ஆக காணப்பட்ட அதிகாரசபையின் பங்களிப்பு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தன. 2013 ஆம் ஆண்டளவில் ரூபா 14,882,174 பெறுமதியாகவிருந்த பங்களிப்பு 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 21,601,523 வரை அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அப்பெறுமதி மீண்டும் 23,353,068 ஆல் குறைவடைந்து ரூபா 1,751,545 மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

அதிகாரசபையின் கொள்வனவுச் செயற்பாட்டிற்கு அப்பால் ரூபா 7,004,309 தொகைக்கு மின் உயர்த்தி ஒன்றைக் கொள்வனவு செய்து பொருத்தும் நடவடிக்கை இலங்கை இராணுவத்திட்டம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றத்தை கருத்திற்கொள்ளாது 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 5,461,555 தொகையொன்று இராணுவ நலன்புரி நிதியத்திற்கு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2016 செப்தம்பர் 21 ஆந் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் இந்த மின் உயர்த்தியைப் பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

### 4.2 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறைந்த வருமானமுடைய இராணுவ வீரர்கள் மற்றும் தங்கியிருப்போர் ஆகியோருக்காக மூக்குக் கண்ணாடிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 2011 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், அதனைத் தொடர்ந்தும் நாளதுவரையாக்கல் பொருத்தமானதென ரணவிரு நலன்புரிக்கான மனநல சமூக செயற்திட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 2015 பெப்ரவரி 24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரணவிரு நலன்புரி தொடர்பில் கவனத்தைச் செலுத்தாமல் இந்நிகழ்ச்சித்திட்டம் 2015 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு 5 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,830,450 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 2016 செப்தம்பர் 21 ஆந் திகதி வரையிலும் 21 மாதங்கள் கடந்த நிலையிலும், தீர்வுசெயயப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(இ) ரணவிரு நலன்புரியை மேம்படுத்தும் அடிப்படை செயற்திட்டமாக சலுகை வட்டி விகிதத்தின் கீழ் இராணுவ வீரர்களுக்குக் கடன் வழங்குவதற்காக மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 159,360,000 தொகையில் ரூபா 106,190,000 தொகை மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், நிதி ஏற்பாட்டில் 33 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 2014 ஆம் ஆண்டின் போது சங்சந்த, சுயதொழில், மருத்துவ மற்றும் முச்சக்கர வண்டிக் கடனாக 552 நபர்களுக்கு ரூபா 130,680,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது 342 நபர்களுக்கு ரூபா 84,060,000 மாத்திரம் கடனாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதிகாரசபையின் பதில் தலைவரின் விளக்கத்தின் பிரகாரம் முச்சக்கர வண்டிகளுக்காக கடன் வழங்கும் செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டின் போது நிறுத்தப்பட்டுள்ளதுடன் ஏனைய கடனுக்காக தகைமையுடைய நலனாளிகளின் எண்ணிக்கை குறைவடைந்ததன் காரணமாக வழங்கப்பட்ட கடன் அளவு ஒப்பீட்டு ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்தது.

**4.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுமதி சேர் வரியில்லாமல் ரூபா 40,000 ஆன மாதாந்த வாடகை வரம்பிற்கு வாகனங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக அதிகாரசபையின் உப தலைவரால் பயன்படுத்தப்பட்ட அதிகாரசபையின் மோட்டார் வாகனம் தூரப் பிரயாணங்களுககுப் பொருத்தமற்றதெனக் குறிப்பிடப்பட்டு 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி முதல் 2016 சனவரி 15 ஆந் திகதி வரை வாடகை அடிப்படையில் மோட்டார் வண்டியொன்றைப் பெற்று மாதமொன்றிற்கு ரூபா 70,000 வீதம் ரூபா 210,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் 2015 ஆம் ஆண்டிற்குரிய நிதி அதிகாரங்களைக் கையளிக்கும் பதிவேட்டின் பிரகாரம் முத்திரையிடப்பட்ட 03 கூறுவிலைகளுக்கு குறையாத விலை விபரங்களை கோரக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட உயர் எல்லை ரூபா 250,000 ஆக இருந்தது. அதற்கு முரணாக, ரணவிரு தினத்தைக் கொண்டாடும் விழாவிற்காக அதிகாரசபையின் ஆண் பதவியணியினருக்காக சீருடைகளைத் கொள்வனவு செய்வதற்கு ரூபா 434,780 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஒத்த விதந்துரைப்புகளுடன் கூறுவிலையைச் சமர்ப்பித்திருந்த வழங்குனருக்குப் பதிலாக கூடிய கூறுவிலையைச் சமர்ப்பித்திருந்த வழங்குனருக்கு கட்டளை வழங்கப்பட்டதன் காரணமாக அதிகாரசபைக்கு ரூபா 231,760 ஆன நட்டமொன்று ஏற்பட்டிரந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சனாதிபதி செயயலாளரின் பீசீஎம்டீ/பீஆர்/2013 மற்றும் 2013 யூன் 05 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் சிதைவடைந்து காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் என்பவற்றை கைதவிர்ப்பதற்கு அல்லது ஏல விற்பனை செய்வதற்கு அல்லது நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கைதவிர்ப்புச் செயற்பாட்டிற்கு இணங்க ஒருவல உருக்கு கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 03 வருடங்கள் முதல் 14 வருடங்களாக விளைவற்றுக் காணப்படும் 03 வேன்களும் மோட்டார் சைக்கிளொன்றும் 02 கெப் வண்டிகளும் அதிகாரசபையின் வளவில் காணப்பட்டன. பதில் தலைவரின் பதிலின் பிரகாரம் வாகனங்களை கைதவிர்ப்பதற்காக அரச நிதித் திணைக்களத்தின் பீஎவ்டீ/ஏஎஸ்டீ/வீஈஎச்/353(5)vii மற்றும் 2014 நவம்பர் 04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், அக்கடித்தில் புதிய வாகனங்கள் கிடைத்ததன் பின்னரே கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்ட காரணத்தினால் அச்சொத்துக்களை கைதவிர்ப்புச் செய்ய முடியாதிருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கும் ரணவிரு முன்னுரிமை அடையாள அட்டைகளை அச்சிடுவதற்காக 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதி ரூபா 651,739 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட அச்சிடல் இயந்திரம் மற்றும் ஏனைய உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கணக்காய்வுத் திகதியான 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் அச்செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், உள்ளக அடையாள அட்டை அச்சிடுவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) 2015 பெப்ரவரி 26 ஆந் திகதி ரூபா 3,171,460 செலவு செய்து ரணவிரு சேவா அதிகாரசபையினால் 27 கணனிகளும் மல்ரிமீடியா இயந்திரமொன்றும் கூடிய விலையைச் சமர்ப்பித்த அரச கூட்டுத்தாபனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 1,301,760 பெறுமதியான 12 கணனிகள் உட்பட பயன்படுத்தக்கூடிய நிலையிலுள்ள 24 கணனிகள் அதிகாரசபையின் களஞ்சியத்தில் காணப்பட்டமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கணனிகளை கொள்வனவு செய்யும்போது அப்பொருட்களின் தேவைப்பாட்டை முறையாக இனங்காணாமல் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 இன் 54 ஆம் இலக்க ரயவிருசேவா அதிகாரச்சட்டத்தின் 5(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தும் அதிகாரம் முகாமைத்துவ சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், தலைவரால் தகைமைகளைப் பூர்த்தி செய்திராத 11 உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு எம்எம்-1-1 சம்பள முறைமையின் 06 கட்டத்தின் முன் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2007(i) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக இரண்டு ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் மதியுரையாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், வருடாந்த படிகளாக ரூபா 566,250 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டில் ரணவிரு சேவா அதிகாரசபையின் நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 3 நிறைவேற்று தர பதவிகளும் அதாவது பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஆகிய உத்தியோகத்தர்களும் நிறைவேற்றுத் தரமல்லாத 30 பதவிகளும் ஏனைய பதவியணியில் 6 பதவிகள் உட்பட 39 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. இந்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஆட்சேர்ப்புச் செய்யப்படாமல் அங்கீகரிக்கப்படாத செயற்திட்ட உதவியாளர் பதவிகளுக்காக ஐந்து உத்தியோகத்தர்க்ள ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மேற்படி வெற்றிடங்கள் காணப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களை குறித்த நேரத்தில் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தமையால் பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இடம்பெற்றிருக்கவில்லை.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

--------------------------------------------------------------------

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-------------------------------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 14 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

நடப்பாண்டிற்குரிய இலக்குகளை நிறைவேற்றுவதற்காக பாதீட்டில் நிதி ஏற்பாடு செய்துகொள்ள வேண்டியதுடன், அந்நிதியங்களை செயற்திறனாக பயன்படுத்திக் கொள்வதற்காக நிதி மற்றும் பௌதீக இலக்குகளில் பொறுப்பினை உறுதிப்படுத்தி செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு காலரீதியில் உள்ளவாறான மீதிகளுடன் ஒப்பிட்டு தேவையான திருத்தங்களுடன் அவசியமான இலக்குகளை நோக்கி வழிநடாத்தப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையால் மீளாய்வாண்டினுள் அவ்வாறான பாதீட்டுக் கட்டுப்பாடொன்றும் செயல் நடவடிக்கைத் திட்டமொன்றின் பிரகாரமும் வழிகாட்டல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

ரணவிரு சேவா அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வாளராக பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினமான 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதி வரையிலும் அப்பதவிக்கு நபரொருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் இலங்கை விமானப்படையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5.4 கொள்வனவுத் திட்டம்

ரணவிரு சேவா அதிகாரசபையின் 2015 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 21.91 மில்லியன் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் பிரதான நோக்கமான வலதுகுறைந்த இராணுவ வீரர்களின் நலன்புரிக்காக சக்கர நாற்காலிகள், ஊன்றுகோள் என்பவற்றை வழங்குவதற்காக எவ்வித மதிப்பீடொன்றும் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

அதிகாரசபையால் கொள்வனவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமை செயற்படுத்தப்படாமல் ரூபா 7,004,309 தொகைக்கு மின்உயர்த்தியைக் கொள்வனவு செய்து பொருத்தும் நடவடிக்கை இலங்கை இராணுவத்திடம் படைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. நி.பி. 237(ஆ) இணங்காத வகையில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி இதற்காக ரூபா 5,461,555 தொகை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்விற்கு உட்படாத தரைப்படை நலன்புரி நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இது இராணுவத்தின் தனிப்பட்ட நிதியமொன்றாக இருப்பதுடன், நி.பி. 139(5) இன் பிரகாரம் பெறுவோனின் அடையாளம் உறுதிப்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | அதிகாரசபையின் கணக்குப் பிரிவின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது கொடுக்கல் வாங்கல் பேரேடு மற்றும் காசேட்டில் பதிவுசெய்தல், வங்கி கணக்கிணக்கம் தயாரித்தல் மற்றும் பரீட்சித்தல் போன்றவை தொடர்பாக சிறந்த வேலைப் பகிர்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அந்நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு உரிய முறையில் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிக்கட்டுப்பாடு | முற்பணம் வழங்குதல், தீர்த்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்தல் தொடர்பில் உரிய மேற்பார்வை இடம்பெறாமை |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) | உள்ளகக் கட்டுப்பாடு | அதிகாரசபையில் காணப்படும் பிரிவுகளின் செயற்பாடுகளை முறையாக செயற்படுத்தக்கூடிய வகையில் சிறந்த உள்ளகக் கட்டுப்பாடு உரிய முறையில் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (உ) | கொள்வனவுச் செயற்பாடுகள் | பொருட் கொள்வனவின் போது உரிய சட்டங்கள், விதிகளை பின்பற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |